1. Which section of the Scheduled Tribes and other Traditional Forest Dwellers Act, 2006 defines Forest Rights.

(A) Section 4 (B) Section 8

(C) Section 3 (D) Section 2

பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனவாசிகள் சட்டம் 2006–ன் எந்த பிரிவு வன உரிமைகளை விவரிக்கிறது?

(A) பிரிவு 4 (B) பிரிவு 8

(C) பிரிவு 3 (D) பிரிவு 2

2. As per the Scheduled Tribes and other Traditional Forest Dwellers Act, 2006, which section are to be inviolate for the purpose of Wildlife Conservation?

(A) Section 2 (B) Section 2 (A)

(C) Section 4 (D) Section 7

பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனவாசிகள் சட்டம் 2006–ன் எந்த பிரிவின் கீழ் வன உயிரினப் பாதுகாப்பிற்காக பரிசுத்தப்பகுதி என அறிவிக்கப்படுகிறது?

(A) பிரிவு 2 (B) பிரிவு 2 (ஆ)

(C) பிரிவு 4 (D) பிரிவு 7

3. Who is heading National Board for Wildlife?

(A) Prime Minister of India

(B) Minister of Forests, Government India

(C) Secretary to Forests, Government of India

(D) Director General of Forests, New Delhi

தேசிய வன உயிரின வாரியத்தின் தலைவர் யார்?

(A) பாரத பிரதமர்

(B) வனத்துறை அமைச்சர், இந்திய அரசு

(C) வனத்துறைச் செயலர், இந்திய அரசு

(D) வனத்துறை டைரக்டர் ஜெனரல், புதுடெல்லி

4. Which section in Wildlife (Protection) Act, 1972 empowers Forest Officers to compound Wildlife offence?

(A) Section 39 (B) Section 18

(C) Section 50 (D) Section 54

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972–ல் எந்த பிரிவின் படி வன அலுவலருக்கு இணக்க கட்டணம் விதிக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது?

(A) பிரிவு 39 (B) பிரிவு 18

(C) பிரிவு 50 (D) பிரிவு 54

5. Which section of Wildlife (Protection) Act, 1972, empowers the State Government to appoint Honorary Wildlife Wardens?

(A) Section 4

(B) Section 18

(C) Section 21

(D) Section 3

1972 – ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 – ல் எந்த பிரிவின்படி அரசு கவுரவ வன உயிரின காப்பாளரை நியமிக்கிறது?

(A) பிரிவு 4

(B) பிரிவு 18

(C) பிரிவு 21

(D) பிரிவு 3

6. Which of the following species is not a Scheduled Timber?

(A) Rose wood (B) Teak wood

(C) Black wood (D) Red Sanders

கீழ்கண்ட எந்த இனம் அட்டவணைப்படுத்தப்பட்ட மரம் அல்ல?

(A) ஈட்டி மரம் (B) தேக்கு

(C) கருமரம் என்ற கருங்காலி (D) சிவப்பு சந்தனம்

7. Which section of Tamil Nadu Forest Act, 1882, empowers the Forest Officers to arrest without warrant?

(A) Section 50 (B) Section 51

(C) Section 52 (D) Section 55

1882– ம் ஆண்டு வனச்சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வன அலுவலர்கள் கைது ஆணை இன்றி கைது செய்யலாம்?

(A) பிரிவு 50 (B) பிரிவு 51

(C) பிரிவு 52 (D) பிரிவு 55

8. Which section of Indian Penal Code defines Acts for which right of private defense extends to causing death?

(A) Section 97 (B) Section 98

(C) Section 99 (D) Section 100

இந்திய தண்டனைச் சட்டத்தில் எந்த பிரிவில் சுயபாதுகாப்பிற்காக கொலை செய்யும் அளவிற்கான செயல்கள் விளக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 97 (B) பிரிவு 98

(C) பிரிவு 99 (D) பிரிவு 100

9. What is the maximum punishment prescribed under section 3(a) of Forest (Conservastion) Act, 1980?

(A) 7 days (B) 15 days

(C) 1 month (D) 6 months

1980–ம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டத்தில் பிரிவு 3(அ)–ன் கீழ் விவரிக்கப்பட்ட அதிகபட்ச தண்டனை எது?

(A) 7 நாட்கள் (B) 15 நாட்கள்

(C) 1 மாதம் (D) 6 மாதங்கள்

10. Under which section of Tamil Nadu Forest Act, 1882, Forest Officers are considered to be public servants?

(A) Section 59 (B) Section 41

(C) Section 60 (D) Section 65

1882–ம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் எந்த பிரிவின்படி வன அலுவலர்கள் பொது ஊழியர்களாக கருதப்படுவர்?

(A) பிரிவு 59 (B) பிரிவு 41

(C) பிரிவு 60 (D) பிரிவு 65

11. Which section of 1882 Tamil Nadu Forest Act, defines punishment for wrongful seizure or Arrest?

(A) Section 41 (B) Section 39

(C) Section 52 (D) Section 54

1882–ம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் எந்த பிரிவின்படி தவறான கைப்பற்றுதல் அல்லது கைது செய்தலுக்கு தண்டனை குறித்து விவரிக்கப்படுகிறது?

(A) பிரிவு 41 (B) பிரிவு 39

(C) பிரிவு 52 (D) பிரிவு 54

12. Which section of Indian Evidence Act, empowers a Judge to ask questions to witness or parties?

(A) Section 99 (B) Section 160

(C) Section 75 (D) Section 165

இந்திய சாட்சியச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் நீதிபதி சாட்சியிடமோ அல்லது வழக்கு தொடர்புள்ளவர்களிடமோ கேள்வி கேட்கும் அதிகாரத்தை வழங்குகிறது?

(A) பிரிவு 99 (B) பிரிவு 160

(C) பிரிவு 75 (D) பிரிவு 165

13. Which section of Indian Penal Code defines assault on public servant to deter them from doing duty is punishable?

(A) Section 320 (B) Section 420

(C) Section 375 (D) Section 353

இந்திய தண்டனைச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தாக்குதல் நடத்துவது தண்டனைக்குரியது என தெரிவிக்கிறது?

(A) பிரிவு 320 (B) பிரிவு 420

(C) பிரிவு 375 (D) பிரிவு 353

14. Power to arrest the offender under Tamil Nadu Forest Act, 1882 is given to the following rank of Forest Officer and above?

(A) Forest Watcher (B) Anti poaching watcher

(C) Forest Guard (D) Forester

கீழ்கண்ட அலுவலர் மற்றும் அதற்கு மேல் உள்ள வனத்துறை அலுவலர்கள் 1882–ம் ஆண்டு வனச்சட்டத்தின்படி கைது செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) வனக்காவலர் (B) வேட்டைத் தடுப்பு காவலர்

(C) வனக்காப்பாளர் (D) வனவர்

15. National Tiger Conservation Authority is defined in the following section of Wildlife (Protection) Act, 1972?

(A) Section 38 K (B) Section 38 A

(C) Section 49 A (D) Section 51 A

1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தில் எந்த பிரிவில் தேசிய புலிகள் ஆணையம் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 38 K (B) பிரிவு 38 A

(C) பிரிவு 49 A (D) பிரிவு 51 A

16. The term of office of the members of Central Zoo Authority of India should not exceed?

(A) 3 Years

(B) 5 Years

(C) 2 Years

(D) 1 Years

மத்திய வன உயிரியல் பூங்கா ஆணையத்தின் உறுப்பினர் பதவி எத்தனை ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்?

(A) 3 வருடங்கள்

(B) 5 வருடங்கள்

(C) 2 வருடங்கள்

(D) ஒரு வருடம்

17. Under which section of Wildlife (Protection) Act, 1972, Wildlife are Government property?

(A) Section 18 (B) Section 39

(C) Section 40 (D) Section 21

1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தில் எந்த பிரிவின்படி வன உயிரினங்கள் அரசு சொத்து ஆகும்?

(A) பிரிவு 18 (B) பிரிவு 39

(C) பிரிவு 40 (D) பிரிவு 21

18. In which year Tamil Nadu Hill Areas (Preservation of Trees) Act has been enacted?

(A) 1972 (B) 1980

(C) 1965 (D) 1955

எந்த ஆண்டு தமிழ்நாடு மலை தள (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் இயற்றப்பட்டது?

(A) 1972 (B) 1980

(C) 1965 (D) 1955

19. In which year Forest Officers were empowered under Tamil Nadu Forest Act, 1882 to confiscate seizures involved in Scheduled Timber Cases?

(A) 1972 (B) 1992

(C) 1979 (D) 2002

1882–ம் ஆண்டு வனச்சட்டத்தின்படி, பட்டியல் இன மரங்கள் குறித்த வழக்கில் பிடி பொருட்களை அரசுடைமையாக்க வன அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட ஆண்டு எது?

(A) 1972 (B) 1992

(C) 1979 (D) 2002

20. Under which section of Tamil Nadu Forest Act, 1882, Forest Officers are empowered to confiscate the seizures involved in Scheduled Timber offences?

(A) Section 39 (B) Section 49 (A)

(C) Section 64 (A) (D) Section 68 (A)

1882–ம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தில் எந்த பிரிவின் கீழ் வன அலுவலர்களுக்கு பட்டியல் இனமர வழக்குகளில் பிடிபொருட்களை அரசுடைமையாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 39 (B) பிரிவு 49 (அ)

(C) பிரிவு 64 (அ) (D) பிரிவு 68 (அ)

21. Who is the authority to pass orders for Prosecution in Tamil Nadu Preservation of Private Forest Act?

(A) District Forest Officer

(B) District Collector

(C) District Revenue Officer

(D) Forest Range Officer

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டத்தில் குற்ற வழக்கு தொடுக்க உத்தரவிடும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) மாவட்ட வன அலுவலர்

(B) மாவட்ட ஆட்சியர்

(C) மாவட்ட வருவாய் அலுவலர்

(D) வனச்சரக அலுவலர்

22. Under which section of Forest (Conservation) Act, 1980, Non-Forest Activities are prohibited in Forest lands?

(A) Section 2 (B) Section 3

(C) Section 3 (A) (D) Section 4

1980–ம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வன நிலங்கள் பிற பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படுவதை தடை செய்யப்பட்டுள்ளது?

(A) பிரிவு 2 (B) பிரிவு 3

(C) பிரிவு 3 (அ) (D) பிரிவு 4

23. The Forest Settlement Officer is appointed under Section ———— of Tamil Nadu Forest Act, 1882.

(A) Section 3 (B) Section 4

(C) Section 8 (D) Section 16

1882–ம் ஆண்டு வனச்சட்டத்தின் எந்தப்பிரிவின் கீழ் வன நிர்ணய அலுவலர் நியமிக்கப்படுகிறார்?

(A) பிரிவு 3 (B) பிரிவு 4

(C) பிரிவு 8 (D) பிரிவு 16

24. Under which section of Tamil Nadu Forest Act, 1882, Non-bailable offence is defined?

(A) Section 40 (A) (B) Section 45

(C) Section 56 (A) (D) Section 56 (B)

1882–ம் ஆண்டு வனச்சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் ஜாமினில் வெளிவிடா குற்றம் குறித்து கூறப்பட்டுள்ளது?

(A) பிரிவு 40 (அ) (B) பிரிவு 45

(C) பிரிவு 56 (அ) (D) பிரிவு 56 (ஆ)

25. Upto which limit a Wildlife offence can be compounded?

(A) Rs. 1.00 Lakhs (B) Rs. 50,000

(C) Rs. 25,000 (D) Rs. 10,000

வன உயிரினச் சட்டத்தின்படி வழக்குகளில் உச்சபட்சம் எவ்வளவு ரூபாய் இணக்கக் கட்டணம் வசூலிக்கலாம்?

(A) ரூ. 1.00 லட்சம் (B) ரூ. 50,000

(C) ரூ. 25,000 (D) ரூ. 10,000

26. Which Section of Criminal Procedure Code defines how to record confessions and statements?

(A) Section 120
(B) Section 360
(C) Section 164
(D) Section 184

இந்திய குற்றவியல் நடைமுறை நூலில் எந்த பிரிவில் ஒப்புதல் வாக்கு மூலங்கள் மற்றும் வாக்குமூலங்கள் பெறுவது குறித்து விளக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 120
(B) பிரிவு 360
(C) பிரிவு 164
(D) பிரிவு 184

27. The courts are functioning as per the provision of?

(A) Cr.PC.
(B) IPC
(C) Indian Evidences Act
(D) Contempts of Court Act

நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட சட்ட நூலில் கண்டவாறு இயங்குகின்றன?

(A) இந்திய குற்றவியல் நடைமுறை நூல்
(B) இந்திய தண்டனைச் சட்டம்
(C) இந்திய சாட்சிய சட்டம்
(D) நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்

28. Code of Criminal Procedure (Amendment) Act, was promulgated in the year?

(A) 2008
(B) 2009
(C) 2010
(D) 2011

இந்திய குற்றவியல் நடைமுறை (திருத்திய) சட்டம் எந்த ஆண்டில் கொண்டு வரப்பட்டது?

(A) 2008
(B) 2009
(C) 2010
(D) 2011

29. Which section in Cr.PC. provides power to Police Officer to arrest without warrant?

(A) Section 41 (B) Section 42

(C) Section 43 (D) Section 44

குற்றவியல் நடைமுறை சட்டத்தில் எந்த பிரிவின் கீழ் காவல் துறையினருக்கு வாரண்ட் இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 41 (B) பிரிவு 42

(C) பிரிவு 43 (D) பிரிவு 44

30. Which section of Cr.PC. deals with seizure of suspicious properties?

(A) Section 101 (B) Section 102

(C) Section 103 (D) Section 104

குற்றவியல் நடைமுறை சட்டத்தின் எந்த பிரிவில் ஒரு காவல் அலுவலர் சந்தேகத்திற்குரிய பொருட்களை கைப்பற்றலாம்?

(A) பிரிவு 101 (B) பிரிவு 102

(C) பிரிவு 103 (D) பிரிவு 104

31. Under what section of Cr .PC, a private person can arrest Certain offenders?

(A) Section 41 (B) Section 42

(C) Section 43 (D) Section 44

தனிநபர் சில நேரங்களில் சில குற்றவாளிகளை கைது செய்யலாம். இதற்குரிய குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு எது?

(A) பிரிவு 41 (B) பிரிவு 42

(C) பிரிவு 43 (D) பிரிவு 44

32. From whom permission has to be obtained for diverting water from a stream passing through Reserve Forest?

(A) District Collector in consultation with the Conservator of Forests

(B) Conservator of Forests

(C) District Forest Officer

(D) Revenue Divisional Officer

ஒரு காப்புக்காட்டிலிருந்து பாய்ந்து வரும் ஓடை நீரை, கீழ்காணும் அலுவலர்களில் யாரிடம் அனுமதி பெற்று தனி நபரின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தலாம்?

(A) வனப்பாதுகாவலருடன் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கலாம்

(B) வனப்பாதுகாவலர்

(C) மாவட்ட வன அலுவலர்

(D) கோட்ட வருவாய் அலுவலர்

33. What is the buffer Zone i.e belt of vacant land to be left unassigned between the land to be assigned and boundary of the Reserve Forests?

(A) 40.2 mts (B) 10 mts

(C) 20 mts (D) 15 mts

காப்புக்காட்டின் எல்லைக்கும் தனிநபருக்கு ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்ட நிலத்திற்கும் எவ்வளவு நிலப்பரப்பு இடைவெளியாக இருக்க வேண்டும்?

(A) 40.2 மீட்டர் (B) 10 மீட்டர்

(C) 20 மீட்டர் (D) 15 மீட்டர்

34. When a land is declared as Reserve Land under section 26 of the Tamil Nadu Forest Act, 1882, what is the procedure for the grant of patta on that land?

(A) Can be given by the District Collector

(B) Can be given by the District Collector in consultation with the Conservator of Forests

(C) Can be given by the Revenue Divisional Officer

(D) Can be given by the District Forest Officer

தமிழ்நாடு வன (பாதுகாப்பு) சட்டம், 1882 பிரிவு 26ன் கீழ் காப்பு நிலமாக அறிவிக்கை செய்த பின், எந்த விதிமுறையின்படி அந்த நிலத்தில் பட்டா வழங்கலாம்?

(A) மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கலாம்

(B) வனப்பாதுகாவலருடன் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கலாம்

(C) கோட்ட வருவாய் அலுவலர் வழங்கலாம்

(D) மாவட்ட வன அலுவலர் வழங்கலாம்

35. The power of Revenue Divisional Officer to confirm lease and sale in respect on Non Timber Forest Produce derived from a land which is described as Trees / Forests in the records of Revenue Department.

(A) upto Rs.200

(B) above Rs.200 and upto Rs. 1,000

(C) above Rs.1,000 and upto Rs. 2,500

(D) above Rs. 2,500 and upto 5,000

வருவாய் துறையின் ஆவணங்களில் மரங்கள், காடுகள் என நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து கிடைக்கும் சிறுவன மகசூலை ஏலம் விடவும், குத்தகை விடவும், எவ்வளவு தொகை வரையில் ஆட்சியர் அவர்களுக்கு ஏலக்காய உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது?

(A) ரூபாய் 200 வரை

(B) ரூபாய் 200 முதல் ரூபாய் 1,000 வரை

(C) ரூபாய் 1,000 முதல் ரூபாய் 2,500 வரை

(D) ரூபாய் 2,500 முதல் ரூபாய் 5,000 வரை

36. Which Officers in the Tamil Nadu Forest Department are vested with the powers of District Collector under section 3 and 5 of the Tamil Nadu Land Encroachment Act, 1905 to speed up eviction inside Reserved Forest and Reserved Land?

(A) District Forest Officer and Forest Range Officer

(B) Forest Range Officer and Forester

(C) Forest Guard and Forest Watcher

(D) Forest Watcher and Mali

வனத்துறையில் எந்தெந்த அதிகாரிகளுக்கு தமிழ்நாடு நிலம் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 1905 பிரிவு 3 மற்றும் 5 ஆகியவைகளின்படி மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை காப்புக்காடு மற்றும் காப்பு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை விரைவாக அகற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) மாவட்ட வன அலுவலர் மற்றும் வனச்சரக அலுவலர்

(B) வனச்சரக அலுவலர் மற்றும் வனவர்

(C) வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர்

(D) வனக்காவலர் மற்றும் மாலி

37. Who is the appellate authority against the orders of the District Forest Officer / Forest Range Officer, in respect of section 3 and 5 of Tamil Nadu Land encroachment Act, 1905?

(A) District Collector

(B) Revenue Divisional Officer

(C) Tahsildar

(D) District Revenue Officer

தமிழ்நாடு நிலம் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 1905–ன் பிரிவு 3 மற்றும் 5 ஆகிய ஷரத்துக்களின்படி, மாவட்ட வன அலுவலர் மற்றும் வனச்சரக அலுவலர் ஆகியோர் கூட்டாக செயல்படுத்தும் ஆணைக்கு மேல் முறையீட்டு அலுவலர் யார்?

(A) மாவட்ட ஆட்சித்தலைவர்

(B) கோட்ட வருவாய் அலுவலர்

(C) வட்டாட்சியர்

(D) மாவட்ட வருவாய் அலுவலர்

38. Under the Land Encroachment Act, 1905, who are the members included in the Committee authorized for the eviction of encroachments within a specific period?

(A) District Collector, District Police Officer, Executive Engineer, (Water Resource Organization PWD), Divisional Engineer (Highways) and District Forest Officer

(B) Executive Engineer, Water Resource Organization and District Educational Officer

(C) Divisional Engineer (Highways), District Forest Officer

(D) District Collector, Divisional Engineer (TNEB) and Chief Educational Officer

தமிழ்நாடு நிலம் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 1905–ன் படி யார் யாரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவினை, மாவட்ட அளவில் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது?

(A) மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு, பொது பணித்துறை) கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் மாவட்ட வன அலுவலர்

(B) செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்

(C) கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் மாவட்ட வன அலுவலர்

(D) மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்ட பொறியாளர் (மின்சார வாரியம்) மற்றும் முதன்மை கல்வி அலுவலர்

39. The action of the District level encroachment committee constituted under the chairmanship of District Collector and other District Level Officer as members, in evicting the encroachment is reviewed by whom?

(A) Commissioner of Land Administration

(B) Commissioner of Revenue Administration

(C) The Principal Secretary to Government, Environment and Forests Department

(D) The Principal Secretary to Government, Finance Department

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தலைவராக கொண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் குழுவின் செயல்பாடுகளை மாநில அளவில் எந்த உயர் அலுவலரால் ஆய்வுரை செய்யப்படும்?

(A) நில நிர்வாக ஆணையர்

(B) வருவாய் துறை நிர்வாக ஆணையர்

(C) அரசு முதன்மை செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

(D) அரசு முதன்மை செயலர், நிதித்துறை

40. The procedure for sales of private land lying in or adjoining Reserve Forests to the Tamil Nadu Forest Department due to arrears of revenue?

(A) A notice has to be given to the District Forest Officer and if he is of the opinion that the Government should purchase the land in question for forestry purposes, he should inform the same to the District Collector. The District Collector in consultation with the Conservator of Forests will initiate action to get the land on behalf of the Government.

(B) A notice has to be given to the Forest Range Officer and if he is of the opinion that the Government should purchase the land in question for Forestry purposes, he should inform the same to the Revenue Divisional Officer. The Revenue Divisional Officer in consultation with District Forest Officer will initiate action to get the land on behalf of the Government

(C) A notice has to be given to the Forester and if he is of the opinion that the Government should purchase the land in question for Forestry purposes, he should inform the same to the Forest Range Officer. The Forest Range Officer in consultation with District Forest Officer will initiate action to get the land on behalf of the Government.

(D) A notice has to be given to the District Forest Officer and if he is of the opinion that the Government should purchase the land in question for Forestry purposes, he should inform the same to the Conservator of Forests. The Conservator of Forests in consultation with District Collector will initiate action to get the land on behalf of the Government.

ஒரு காப்புக்காட்டினுள்ளோ அல்லது காப்புக்காட்டிற்கு அருகாமையிலோ பட்டா நிலமானது விற்பனைக்கு வரும் சூழ்நிலையில் கீழ்காணும் எந்த வகையில் வனத்துறைக்கு மாற்றம் செய்யலாம்?

(A) மாவட்ட வன அலுவலருக்கு அறிவிப்பு தரப்பட்டு, வனப்பயன்பாட்டிற்கு அந்த நிலம் தேவைப்படும் என்றும், வனத்துறைக்கு வாங்க வேண்டும் என முடிவெடுத்து, அக்கருத்தினை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பார். பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வனப் பாதுகாவலருடன் கலந்தாலோசித்து அரசு சார்பாக அந்த நிலத்தை பெற நடவடிக்கை தொடரலாம்

(B) வனச்சரக அலுவலருக்கு அறிவிப்பு தரப்பட்டு, வனப் பயன்பாட்டிற்கு அந்த நிலம் தேவைப்படும் என்றும், வனத்துறைக்கு வாங்க வேண்டும் என முடிவெடுத்து, அக்கருத்தினை கோட்டாட்சியருக்கு தெரிவிப்பார். பின்னர் கோட்டாட்சியர், மாவட்ட வன அலுவலருடன் கலந்தாலோசித்து அந்த நிலத்தை பெற நடவடிக்கை தொடரலாம்

(C) வனவருக்கு அறிவிப்பு தரப்பட்டு, வனப் பயன்பாட்டிற்கு அந்த நிலம் தேவைப்படும் என்றும், வனத்துறைக்கு வாங்க வேண்டும் என முடிவெடுத்து, அக்கருத்தினை வனச்சரக அலுவலருக்கு தெரிவிப்பார். பின்னர் வனச்சரக அலுவலர், மாவட்ட வன அலுவலருடன் கலந்தாலோசித்து அந்த நிலத்தை பெற நடவடிக்கை தொடரலாம்

(D) மாவட்ட வன அலுவலருக்கு அறிவிப்பு தரப்பட்டு, வனப் பயன்பாட்டிற்கு அந்த நிலம் தேவைப்படும் என்றும், வனத்துறைக்கு வாங்க வேண்டும் என முடிவெடுத்து, அக்கருத்தினை வனப்பாதுகாவலருக்கு தெரிவிப்பார். பின்னர் வனப்பாதுகாவலர் அவர்கள் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து அரசு சார்பாக அந்த நிலத்தை பெற நடவடிக்கை தொடரலாம்

41. Which section of Wildlife (Protection) Act, 1972, mandates Tiger Conservation Plan?

(A) Section 38 N (B) Section 38 M

(C) Section 38 V (D) Section 38 X

1972–ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் புலிகள் பாதுகாப்பு திட்டம் தீட்டுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 38 N (B) பிரிவு 38 M

(C) பிரிவு 38 V (D) பிரிவு 38 X

42. Which section of Wildlife (Protection) Act, 1972, prohibits hunting?

(A) Section 3 (B) Section 5

(C) Section 8 (D) Section 9

1972–ம் ஆண்டு வன உயிரினச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படி வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது?

(A) பிரிவு 3 (B) பிரிவு 5

(C) பிரிவு 8 (D) பிரிவு 9

43. Which section of Wildlife (Protection) Act, 1972, prohibits picking, uprooting etc of specified plants?

(A) Section 9 (B) Section 12

(C) Section 17 (A) (D) Section 18 (A)

1972–ம் ஆண்டு வன உயிரினச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் குறிப்பிட்ட தாவரங்களை பிடுங்குதல், சேகரித்தில் தடை செய்யப்பட்டுள்ளது?

(A) பிரிவு 9 (B) பிரிவு 12

(C) பிரிவு 17 (A) (D) பிரிவு 18 (A)

44. In Wildlife Sanctuary and National Parks, the encroachments can be evicted only by an officer not below the Rank of?

(A) Forester (B) Forest Ranger

(C) Assistant Conservator of Forests (D) Deputy Conservator of Forests

தேசிய பூங்கா அல்லது வன உயிரின சரணாலயத்தில் கீழ்கண்ட நிலை அலுவலர் மற்றும் அவருக்கு மேல் உள்ள அலுவலரால் தான் ஆக்கிரமிப்பை அகற்ற இயலும்?

(A) வனவர் (B) வனச்சரகர்

(C) உதவி வனப்பாதுகாவலர் (D) துணை வனப்பாதுகாவலர்

45. Which section of Wildlife (Protection) Act, 1972, mandates registration of fire Arms by those who live within 10 km radius of Wildlife Sanctuary?

(A) Section 33 (B) Section 34

(C) Section 35 (D) Section 36

1972–ம் ஆண்டு வன உயிரின சட்டத்தின் எந்தப் பிரிவின்படி வன உயிரின சரணாலயத்திற்கு 10 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் நபர்கள் தங்களது அனுமதி பெற்ற துப்பாக்கி குறித்து விபரங்கள் பதிவு செய்வதை கட்டாயமாக்குகிறது?

(A) பிரிவு 33 (B) பிரிவு 34

(C) பிரிவு 35 (D) பிரிவு 36

46. The power to declare vermin is vested by which section of Wildlife (Protection) Act, 1972?

(A) Section 59 (B) Section 60

(C) Section 61 (D) Section 62

தொல்லை தரும் விலங்கு என அறிவிக்க 1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தின் எந்தப் பிரிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது?

(A) பிரிவு 59 (B) பிரிவு 60

(C) பிரிவு 61 (D) பிரிவு 62

47. Which animal is not vermin in the list below?

(A) Common crow (B) Crow Peasant

(C) Mice (D) Rat

கீழ்கண்ட எந்த வன உயிரினம், தொல்லை தரும் விலங்கு பட்டியலில் இல்லை?

(A) காகம் (B) செம்பூத்து

(C) எலி (D) பெருச்சாளி

48. The following is the authority to declare Vermin?

(A) Central Government (B) State Government

(C) Chief Wildlife warden (D) Head of Forest Force

கீழ்கண்டோரில் யாரால் தொல்லை தரும் விலங்கினங்கள் என அறிவிக்க அதிகாரம் உடையவர்?

(A) மத்திய அரசு (B) மாநில அரசு

(C) தலைமை வன உயிரின காப்பாளர் (D) வனத்துறைத் தலைவர்

49. Which section of Wildlife (Protection) Act, 1972 empowers do pay rewards to the informants?

(A) Section 58 (A)
(B) Section 60 (A)
(C) Section 49 (A)
(D) Section 36 (A)

1972–ம் ஆண்டு வன உயிரினச் சட்டத்தின் எந்த பிரிவின்படி வனக்குற்றத்தில் கண்டுபிடிக்க உதவியவர்களுக்கு வெகுமதி அளிக்க வழிவகை செய்கிறது?

(A) பிரிவு 58 (A)
(B) பிரிவு 60 (A)
(C) பிரிவு 49 (A)
(D) பிரிவு 36 (A)

50. Which section of Wildlife (Protection) Act, 1972 empowers Government to notify its intention to declare Wildlife Sanctuary?

(A) Section 9
(B) Section 15
(C) Section 14
(D) Section 18

1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் மாநில அரசு வன உயிரின சரணாலயத்தை அறிவிக்கும் நோக்கத்தை அறிவிக்கையாக வெளியிடுகிறது?

(A) பிரிவு 9
(B) பிரிவு 15
(C) பிரிவு 14
(D) பிரிவு 18

51. If the ownership of the materials found in roads and other places is not known, the person who finds out such material should inform the same to which officer at the first instant?

(A) Sub Inspector of Police
(B) Assistant Engineer (TNEB)
(C) District Educational Officer
(D) District Tourist Officer

சாலைகள் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட உரிமை கொண்டாடப்படாத பொருள்கள் தனிநபரால் கண்டெடுக்கப்பட்டால் அவற்றை கண்டெடுத்தவர் அது குறித்த தகவலை முதன் முதலில் எந்த அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

(A) உதவி காவல் ஆய்வாளர்
(B) உதவி மின் பொறியாளர்
(C) மாவட்ட கல்வி அலுவலர்
(D) மாவட்ட சுற்றுலா அலுவலர்

52. Who is having the authority to relocate, capture or kill the troublesome Schedule I Wild animal of the Wildlife (Protection) Act 1972?

(A) Chief Wildlife Warden
(B) District Collector
(C) Conservator of Forests
(D) Assistant Conservator of Forests

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972, பட்டியல் I–ல் வகைப்படுத்தப்பட்டுள்ள வன விலங்குகளில் மனிதர்களுக்கு தொல்லை தரும் சூழ்நிலையில் அவற்றை கொல்லவோ, பிடிக்கவோ வேறு இடத்திற்கு கொண்டு விடவோ அனுமதி அளிக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) தலைமை வன உயிரின காப்பாளர்
(B) மாவட்ட ஆட்சியர்
(C) வனப் பாதுகவலர்
(D) உதவி வனப்பாதுகாவலர்

53. Which section of IPC describes the public servant?

(A) 21 (B) 52

(C) 24 (D) 36

இந்திய தண்டனைச் சட்டத்தில் எந்தப் பிரிவில் பொது ஊழியர் பற்றி சொல்லப்பட்டுள்ளது?

(A) 21 (B) 52

(C) 24 (D) 36

54. Under which section of Wildlife (Protection) Act, 1972, National Parks are notified?

(A) Section 35 (B) Section 29

(C) Section 51 (D) Section 49

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 ல் ———————— பிரிவின் கீழ் தேசிய பூங்கா அறிவிக்கை செய்யப்படுகிறது?

(A) பிரிவு 35 (B) பிரிவு 29

(C) பிரிவு 51 (D) பிரிவு 49

55. Under which section of Wildlife (Protection) Act, 1972, if there is reason to believe that any person has committed an Wildlife offence, the forestry personal are authorized for entering the house, make search, arrest and detain the offender?

(A) Section 50 (B) Section 47

(C) Section 35 (D) Section 39

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 ———————— பிரிவின் கீழ் எந்த நபராவது குற்றம் புரிந்துள்ளார் என்று நம்புவதற்கு தகுந்த காரணங்கள் கொண்டிருந்தால், அந்த நபரின் வீட்டிற்குள் பிரவேசிக்கவும், தேடவும், கைது செய்யவும் மற்றும் காவலில் வைப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 50 (B) பிரிவு 47

(C) பிரிவு 35 (D) பிரிவு 39

56. Which Officer in the Forest Department is empowered to file charge sheet ‘A’ in the court against the accused involved in Wildlife offences?

(A) Forest Range Officer (B) Forester

(C) Forest Guard (D) Forest Watcher

வன உயரின குற்றத்தில் சம்மந்தப்பட்ட, குற்றவாளி மீது நீதிமன்றத்தில் படிவம் ‘அ’ சமர்பிக்க அதிகாரம் படைத்த அலுவலர் யார்?

(A) வனச்சரக அலுவலர் (B) வனவர்

(C) வனக்காப்பாளர் (D) வனக்காவலர்

57. Water lizard (*Varanus salvator*) is enlisted in ———— Schedule of the Wildlife (Protection) Act, 1972?

(A) Schedule I – Part II
(B) Schedule II
(C) Schedule III
(D) Schedule IV

இந்திய வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 ல் ———— பட்டியலில் நீர் உடும்பு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

(A) அட்டவணை I – பகுதி II
(B) அட்டவணை II
(C) அட்டவணை III
(D) அட்டவணை IV

58. Dugong (*Dugong dugong*) is enlisted in ———— schedule of the Wildlife (Protection) Act, 1972?

(A) Schedule I – Part I
(B) Schedule II
(C) Schedule III
(D) Schedule IV

இந்திய வன உயிரன (பாதுகாப்பு) சட்டம், 1972 ல் ———— பட்டியலில் கடற்பசு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

(A) அட்டவணை I – பகுதி I
(B) அட்டவணை II
(C) அட்டவணை III
(D) அட்டவணை IV

59. Who is authorized officer to issue eviction notice in Reserved Forests under section 68 (a) of Tamil Nadu Act, 1882?

(A) Forest Range Officer
(B) Forester
(C) Forest Guard
(D) Forest Watcher

தமிழ்நாடு வனச்சட்டம், 1882 பிரிவு 68(அ) ன் படி எந்த அலுவலர் வன ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அறிவிப்பு கடிதம் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) வனச்சரக அலுவலர்
(B) வனவர்
(C) வனக்காப்பாளர்
(D) வனக்காவலர்

60. Under the Wildlife (Protection) Act, 1972, who is the competent authority to compound the compoundable Wildlife Offence?

(A) Deputy Conservator of Forests and Wildlife Warden

(B) Forest Range Officer

(C) Forester

(D) Forest Guard

1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தின் படி வன உயிரின குற்றங்களுக்கு இணக்கக் கட்டணம் விதிக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) துணை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர்

(B) வனச்சரக அலுவலர்

(C) வனவர்

(D) வனக்காப்பாளர்

61. Under which rule of Tamil Nadu Sandal Transit Rules, 1967 transport of sandalwood without any valid permit is prohibited?

(A) Rule 2 (B) Rule 3

(C) Rule 4 (D) Rule 5

1967–ம் ஆண்டு சந்தனமரப் போக்குவரத்து விதிகளின்படி, எந்த விதியின் கீழ் சந்தனமரத்தை அனுமதியின்றி எடுத்துச்செல்லக்கூடாது?

(A) விதி 2 (B) விதி 3

(C) விதி 4 (D) விதி 5

62. Under which rule of Tamil Nadu Timber Transit Rules, 1968 the timber should not be transported without a valid permit?

(A) Rule 2 (B) Rule 3

(C) Rule 4 (D) Rule 5

1968–ம் ஆண்டு தடி மரங்கள் போக்குவரத்து விதிகளின் எந்த விதியின் கீழ் தடிமரங்களை அனுமதியின்றி எடுத்துச் செல்லக்கூடாது?

(A) விதி 2 (B) விதி 3

(C) விதி 4 (D) விதி 5

63. Which rule describes the property mark in Tamil Nadu Timber Transit Rules, 1968?

(A) Rule 5 (B) Rule 6

(C) Rule 7 (D) Rule 8

1968–ம் ஆண்டு தமிழ்நாடு தடி மரங்கள் போக்குவரத்து விதிகளில் எந்த விதியில் சொத்து குறியீடு குறித்து கூறப்பட்டுள்ளது?

(A) விதி 5 (B) விதி 6

(C) விதி 7 (D) விதி 8

64. Upto what quantity Red sanders wood can be possessed without licence?

(A) Upto 5 kgs

(B) Upto 100 kgs

(C) Upto 5 $m^3$

(D) Upto 0.5 $m^3$

சிவப்பு சந்தன மரத்தை எவ்வளவு அளவு வைத்திருக்க அனுமதி தேவை இல்லை?

(A) 5 கிலோ வரை

(B) 100 கிலோ வரை

(C) 5 கன மீட்டர்

(D) 0.5 கன மீட்டர்

65. In which year Patta lands Sandalwood Trees Rules were made?

(A) 2008 (B) 2009

(C) 2010 (D) 2011

எந்த ஆண்டில் பட்டா நிலங்களில் சந்தன மர விதிகள் கொண்டு வரப்பட்டன?

(A) 2008 (B) 2009

(C) 2010 (D) 2011

66. Who is the authority to issue prosecution orders in Tamil Nadu Rose wood Trees (Conservation) Act, 1994?

(A) District Collector
(B) District Committee
(C) District Forest Officer
(D) Forest Range Officer

தமிழ்நாடு ஈட்டி மர (பாதுகாப்பு) 1994 சட்டத்தின் கீழ் வழக்கு தொடர உத்தரவிடும் அதிகாரம் பெற்றவர் யார்?

(A) மாவட்ட ஆட்சித்தலைவர்
(B) மாவட்ட வனக்குழு
(C) மாவட்ட வன அலுவலர்
(D) வனச்சரக அலுவலர்

67. How many members are present in District Forest Committee constituted under Tamil Nadu Hill Areas (Preservation of Trees) Act, 1955?

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955–ன் கீழ் அமைக்கப்படும் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பர்?

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

68. What is the extend of land which can be declared as Private Forests by Collector of a District under Tamil Nadu Preservation of Private Forests Act, 1949?

(A) Above 2 Ha
(B) Above 3 Ha
(C) Above 5 Ha
(D) Above 10 Ha

1949–ம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எந்த பரப்பளவிற்கு காடுகள் மாவட்ட ஆட்சித்தலைவரால் தனியார் காடுகள் என அறிவிக்கப்படலாம்?

(A) 2 எக்டேருக்கு மேல்
(B) 3 எக்டேருக்கு மேல்
(C) 5 எக்டேருக்கு மேல்
(D) 10 எக்டேருக்கு மேல்

69. What is the punishment prescribed under Tamil Nadu Preservation of Private Forests Act, 1949?

(A) Imprisonment upto 1 year or Fine upto Rs. 3,000 or both
(B) Imprisonment upto 2 years or Fine upto Rs. 5,000 or both
(C) Imprisonment upto 3 years or Fine upto Rs. 10,000 or both
(D) Imprisonment upto 6 months or Fine upto Rs. 1,000 or both

1949–ம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தண்டனை எது?

(A) ஓராண்டு வரை சிறை அல்லது ரூ. 3,000 அபராதம் அல்லது இரண்டும்
(B) இரண்டாண்டு வரை சிறை அல்லது ரூ. 5,000 அபராதம் அல்லது இரண்டும்
(C) மூன்றாண்டு வரை சிறை அல்லது ரூ. 10,000 அபராதம் அல்லது இரண்டும்
(D) ஆறு மாதம் வரை சிறை அல்லது ரூ. 1,000 அபராதம் அல்லது இரண்டும்

70. The following activity is not listed in Forest Rights Act, 2006 for diversion of Forest land?

(A) Hospital
(B) School
(C) Electrical line
(D) Self Help Group shops

2006–ம் ஆண்டு வன உரிமைச்சட்டப்படி கீழ்கண்ட தேவைகளுக்கு வன நிலத்தை பயன்படுத்த இயலாது?

(A) மருத்துவமனை
(B) பள்ளிக்கூடம்
(C) மின்தடம்
(D) சுய உதவிக்குழு கடைகள்

71. Under Forest Rights Act within how many days petitions shall be filed to Sub Divisional Committee against decision of Gram Sabha?

(A) 15 days
(B) 30 days
(C) 45 days
(D) 60 days

வன உரிமை சட்டத்தின் கீழ் கிராம சபா முடிவுக்கு எதிராக எத்தனை திங்களுக்குள் கோட்ட அளவிலான குழுவுக்கு முறையீடு செய்ய வேண்டும்?

(A) 15 நாட்கள்
(B) 30 நாட்கள்
(C) 45 நாட்கள்
(D) 60 நாட்கள்

72. In which section of Indian Evidence Act, 1872 oral evidence is discussed?

(A) Section 162
(B) Section 163
(C) Section 160
(D) Section 165

இந்திய சாட்சிய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வாய்மொழி சாட்சியம் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 162
(B) பிரிவு 163
(C) பிரிவு 160
(D) பிரிவு 165

73. Which section in IPC defined waging war against India as crime?

(A) Section 120
(B) Section 118
(C) Section 119
(D) Section 121

இந்திய தண்டனைச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் நாட்டுக்கு எதிராக போர் திட்டம் தீட்டுதல் குற்றமாக சொல்லப்பட்டு இருக்கிறது?

(A) பிரிவு 120
(B) பிரிவு 118
(C) பிரிவு 119
(D) பிரிவு 121

74. Which section of IPC defines punishment for murder?

(A) 302 (B) 304

(C) 306 (D) 307

இந்திய தண்டனைச் சட்டத்தில் எந்தப் பிரிவு கொலைக் குற்றத்திற்கு தண்டனை குறித்து கூறுகிறது?

(A) 302 (B) 304

(C) 306 (D) 307

75. Section 3 and 4 of Biological Diversity Act, will not apply to?

(A) Non Resident Indian

(B) Citizen for other countries

(C) Organization from other countries

(D) Institution involved in Colloborative Project with Government

பல்லுயிர் பெருக்க விதிகள் 2002ன் படி பிரிவு (3) மற்றும் (4) ஆகியவை கீழ்கண்டோருக்கு பொருந்தாது?

(A) வெளிநாட்டில் வாழும் இந்தியர்

(B) வெளிநாட்டு பிரஜை

(C) வெளிநாட்டு நிறுவனம்

(D) இந்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டுத்திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனம்

76. Who is authorized under Tamil Nadu Land encroachment Act, 1905 to evict and encroachment in Reserved Forests and Reserved lands?

(A) District Forest Officer (B) Conservator of Forests

(C) Assistant Conservator of Forests (D) Forest Range Officer

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் 1950–ன் சட்டத்தின் கீழ் காப்புக்காட்டிலும் காப்பு நிலத்திலும் ஆக்கிரமிப்பை அகற்ற அதிகாரம் பெற்ற அலுவலர்?

(A) மாவட்ட வன அலுவலர் (B) வனப் பாதுகாவலர்

(C) உதவி வனப்பாதுகாவலர் (D) வனச்சரக அலுவலர்

77. Which section of Biological Diversity Act, 2002 prevents transfer of Results of any research on biological resources without approval of Biological Board?

(A) Section 2 (B) Section 3

(C) Section 4 (D) Section 5

பல்லுயிர் பெருக்க விதிகளின் எந்த பிரிவின் கீழ் பல்லுயிர் ஆதாரங்களின் மீதான ஆராய்ச்சியின் முடிவை எவருக்கும் அனுமதியின்றி தெரிவிக்கலாகாது?

(A) பிரிவு 2 (B) பிரிவு 3

(C) பிரிவு 4 (D) பிரிவு 5

78. As per the survey and Boundaries Act, 1923 all the Village Survey Stones should be protected by?

(A) Village Officer (B) Revenue Inspector

(C) Deputy Tahsildar (D) Tahsildar

கிராமங்களில் உள்ள நில அளவை கற்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம், 1923–ன் படி கீழ்க்கண்ட அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) கிராம அலுவலர் (B) வருவாய் ஆய்வாளர்

(C) துணை தாசில்தார் (D) தாசில்தார்

79. Under which section of Tamil Nadu Forest Act, 1882 cattle trespass Act is applied to grazing offence in Reserve Forests?

(A) Section 57 (B) Section 58

(C) Section 59 (D) Section 60

தமிழ்நாடு வனச்சட்டம் 1882–ல் எந்த பிரிவில் கால்நடை அத்துமீறல் சட்டத்தின் ஷரத்துக்கள் ஒதுக்குக் காட்டில் மேய்ச்சல் குற்றத்திற்கு பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது?

(A) பிரிவு 57 (B) பிரிவு 58

(C) பிரிவு 59 (D) பிரிவு 60

80. As per Wildlife (Protection) Act, 1972, the main difference between a Wildlife Sanctuary and National Park is as follows?

(A) Cattle Grazing allowed to some extent in Wildlife sanctuary but not allowed in National Park

(B) Cattle Grazing allowed to some extent in Wildlife sanctuary and allowed in National Park

(C) Cattle Grazing allowed to some extent in National Park but not allowed in wildlife sanctuary

(D) Cattle Grazing not allowed in Wildlife sanctuary and National Park

1972–ம் ஆண்டு வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தின்படி வன உயிரின சரணாலயத்திற்கும், தேசிய பூங்காவிற்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் என்ன?

(A) வன உயிரின சரணாலயத்தினுள் கால்நடை மேய்ச்சல் குறிப்பிட்ட அளவிற்கு அனுமதிக்கப்படும். தேசிய பூங்காவில் மேய்ச்சல் அனுமதி கிடையாது

(B) வன உயிரின சரணாலயம் மற்றும் தேசிய பூங்காவில் கால்நடை மேய்ச்சல் குறிப்பிட்ட அளவிற்கு அனுமதிக்கப்படும்

(C) வன தேசிய பூங்காவினுள் கால்நடை மேய்ச்சல் குறிப்பிட்ட அளவிற்கு அனுமதிக்கப்படும் உயிரின சரணாலயத்தினுள் மேய்ச்சல் அனுமதி கிடையாது

(D) வன உயிரின சரணாலயம் மற்றும் தேசிய பூங்காவில் கால்நடை மேய்ச்சல் அனுமதி கிடையாது

ROUGH WORK

ROUGH WORK